அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



**அ.எண்** : 12 / 2018
**தேதி** : 25.01.2018

**குடியரசு தின வாழ்த்து**

நாட்டின் 69 வது குடியரசு தினத்தை நாம் அனைவரும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். முன் எப்போதும் இருந்திராத வகையில், கருத்து சுதந்திரம் விவாதப் பொருளாகி வருகிறது. சகிப்புத் தன்மை வெகுவாக குறைந்து மத உணர்வுகள் தலைதூக்கி நமது அடிப்படை பண்பான பன்முகத்தன்மையை கேள்விக்குறியாக்கிவிட்டது.

பொருளாதார வளர்ச்சி என்ற கோஷத்தை முன்வைத்த நாம் சமூக அரசியல், கலாச்சார சீரழிவுகளுக்கு அனுமதி அளித்து விட்டோமா என்ற அச்ச உணர்வும் எழுந்துள்ளது. சாதி, மத, இன, மொழி உணர்வுகள் எழுப்பும் பேதங்களை திருத்த வேண்டிய நிலையில், சிலர் அவற்றை மேலும் ஊதி பெரிதாக்கும் ஆபத்தும் வருத்தத்துடன் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

இந்திய தேசத்தின் பெருமைமிகு மாண்பும், வரலாறும் தாங்கி நிற்கும் அடித்தளத்தை ஆணிவேரை எந்த சூழ்நிலையிலும் அசைத்து விட முடியாது என்பதில் இந்தியர் அனைவரும் உறுதியோடு இருக்க வேண்டும். வல்லரசு என்பதன் நிரூபணம் ஆயுத பலத்தில் இல்லை. அன்பு, மொழி, அகிம்சைநெறி, அமைதிவழி என்ற இலக்கணங்களாலும் எழுதப்பட்டிருக்கிறது.

எனவே எழுச்சிமிகு இந்தியா என்பது நமது சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், சமத்துவம் என்ற கோட்பாடுகளின் ஆலயம் என்ற உணர்வோடு நம் குடியரசு தினத்தை கொண்டாடுவோம்.

குடியரசு என்பது ஒரு நாள் மட்டும் கொண்டாடப்படும் நிகழ்வு அல்ல. உயிரோடு கலந்து போற்றப்படவேண்டிய உணர்வு என்று சொல்லி இந்திய திருநாட்டின் சகோதர, சகோதரிகளுக்கு என் உணர்வான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com